விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 335 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 03 சனிக்கிழமை (19.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## புலிகளை விட்டு விட்டு மக்களை அஞ்சலியுங்கள்

### முல்லைத்தீவு பொலிஸார் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

**வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தாமல் யுத்தத்தில் உயிரிழந்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத் துங்கள் என முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளார்.**

மாவீரர் தின ஏற்பாடுகளில் ஈடுபடுவார்கள் என பொலிஸார் கருதும் பிரதேச பிரமுகர்களை நேற்று முன்தினம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து பொலிஸார் இதனைத் தெரிவித்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட தலைவி ஈஸ்வரி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் து.ரவிகரன், பீற்றர் இளஞ்செழியன், முல்லைத்தீவு வர்த்தகர் சங்கத் தலைவர் கௌரிராசா, செயற்பாட்டாளர்கள் பே.ஜெபநேசனி, சிவநேசராசா ஆகியோர் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு, மேற்படி தகவலை தெரிவித்தனர்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 11

வட்டி வீத அதிகரிப்பால்

## பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணத் திட்டம்

### இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

வட்டி வீத அதிகரிப்பால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் 11

## இன்று வவுனியா வருகிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற தன் பின்னர் முதன்முறையாக இன்று வட மாகாணத்திற்கு 11

நீண்ட நாட்களுக்குப் பின்

## பொது வெளியில் தோன்றிய கோட்டா



11

# கொழும்பில் நேற்று பாரிய போராட்டம்

### போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம்



(கொழும்பு)

வசந்த முதலிகே மற்றும் சிறிதம்ம தேரர் ஆகியோரின் விடுதலையை வலியுறுத்தியும் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராகவும் கொழும்பில் நேற்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் மாபெரும் போராட்டம் இடம்பெற்றது.

(11ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைப் படகுடன்

## இந்தியப் படகு மோதி விபத்து

(கரணவாய்)

இந்திய மீனவர்களது ரோலர் படகு இலங்கை மீனவரின் படகுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இலங்கை மீனவர் கடலில் வீழ்ந்து அதிர்ஷ்ட வசமாக உயிர்தப்பித்தார். 11

## பெண்ணிடம் சங்கிலி அபகரிக்க முயற்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை துவிச்சக்கரவண்டியில் சென்ற பெண்ணின் சங்கிலியை அபகரிக்க முற்பட்ட திருடர்கள் 11

வெளிநாட்டின் உதவி

## தமிழர்களை அழிக்க தேவைப்படும்; தீர்வு வழங்க தேவைப்படாதா?

### சபையில் சிறீதரன் காட்டம்

(கொழும்பு)

தமிழர்களை யுத்தத்தில் அழிக்க பயன்பட்ட வெளிநாட்டுத் தலையீடு தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கும் விடயத்தில் மாத்திரம் தேவையில்லை எனக் கூறுவது எந்த விதத்தில் நியாயமானது என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போதே 11



## 8.5 மில். ரூபாய் மோசடி

### கிளிநொச்சி யுவதி கைது

(கொழும்பு)

கொரிய கப்பல் ஒன்றில் பணிபுரியும் 51 வயதான திருமணம் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## 8.5 மில். ரூபாய்...

செய்துகொள்வதாக உறுதியளித்து 85 லட்சம் ரூபாவை பெற்று மோசடி செய்த 25 வயதான அழகுக்கலை நிபுணரான கிளிநொச்சியைச் சேர்ந்த யுவதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு மோசடி தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸார் யுவதியை கைது செய்துள்ளனர்.

கொழும்பு பம்பலப்பிட்டி பிரதேசத்தில் யுவதி அறிமுகமானதாகவும் அறிமுகமான தின்த்தில் இருந்து இருவரும் நட்பாக பழகி வந்தாக்வும் மோசடிக்கு உள்ளான நபர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி கப்பல் சேவைக்காக புறப்பட்டு சென்றது முதல் கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி வரை சுமார் ஆறு மாதங்கள், யுவதியின் கோரிக்கைக்கு அமைய அவரது தேவைக்காக அவ்வப்போது 85 லட்சம் ரூபா பணத்தை அனுப்பியதாகவும் அவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி இலங்கை திரும்பிய நிலையில், பம்பலப்பிட்டியில் யுவதி தங்கியிருந்த இடத்திற்கு நபர் சென்றுள்ளார். எனினும் ஒரு மாதத்திற்கு முன்னர் யுவதி தனது சொந்த ஊரான கிளிநொச்சிக்கு சென்றுவிட்டதாக தெரியவந்துள்ளது.

யுவதியின் அலைபேசிக்கு அழைப்பை எடுத்த போதிலும் அது செயற்படவில்லை என்பதால், கப்பலில் பணிப்புரியும் நபர் யுவதியை தேடி கிளிநொச்சிக்கு சென்றுள்ளார். எனினும் யுவதியை கண்டுபிடிக்க முடியவில்லை.

பல எதிர்பார்ப்புகளுடன் திருமணம் செய்துகொள்வதற்காக யுவதிக்கு பணத்தை வழங்கியதாகவும் யுவதி தன்னை ஏமாற்றியுள்ளதால், பணத்தை திரும்ப பெற்றுத்தருமாறும் கோரி அந்த நபர், பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (4-7)


**சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்**

கனடா அவுஸ்திரேலியா, லண்டன் போன்ற நாடுகளிற்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (Pvt) LTD**

**076 250 0098**

(13489)


## 19,20,21 திகதிகளுக்கான மின்வெட்டு நேரம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இன்று முதல் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு 1-2 மணி நேரம் மின்வெட்டுக்கு அனுமதி அளித்துள்ளது.

இதன்படி சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை 1 மணிநேர மின்வெட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை 2 மணிநேர மின்வெட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, A,B,C,D,E,F,G,H,I,J,K,L,P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்கள் M,N,O,X,Y,Z ஆகிய வலயங்கள் என பிரிக்கப்பட்டு இந்த மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (4-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் இரசாயனவியல் ஆசிரியை **கலா நமசிவாயம்** அவர்களின் அன்புச் சகோதரியும் எமது கல்லூரியின் ஓய்வுநிலை விஞ்ஞான பாட ஆசிரியையுமான

**அமரர் கமலாதேவி நமசிவாயம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 10.02.1951


மறைவு 17.11.2022

*பிரிவால் துயருறும்*

யாழ். இந்து மகளிர் கல்லூரி சமூகம்

(C-5293)

## மரண அறிவித்தல்



மண்ணில் 20 – 09 – 1970

விண்ணில் 18 – 11 – 2022

## ஐயம்பிள்ளை யோகராசா

**(யாழ். பல்கலைக்கழக களஞ்சியப் பொறுப்பாளர்)**

யாழ்ப்பாணம் கோண்டாவில் வடக்கு தில்லையம்பதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை யோகராசா அவர்கள் நேற்று (18.11.2022) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்ற நடராசா - புஸ்பமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் சுகந்தினி அவர்களின் அன்புக் கணவரும் ஜனனி, பிரணவன், காலஞ்சென்ற யோகீசனின் பாசமிகு தந்தையும் றொசாந்தின் அன்பு மாமனாரும் தேவராசா, இந்திரன், வசந்தி, கனகராசா, செல்வராசா, காலஞ்சென்ற தவராசா, ரதிலீலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிருஸ்ணராசா, மன்மதராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.11.2022) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தில்லையம்பதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(13496)

குடும்பத்தினர்

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post up to **Friday, 30th of November 2022.**

**Post of Temporary Research Assistant**
**"A.S.Thambiah Endowment for Research in Oncology – Faculty of Medicine, University of Jaffna"**

Salary scale : Rs.49,860/- (Fixed) pm

Qualifications:-

1. Basic degree in the field of healthcare with Undergraduate research experience in health research.
   - I. A First or Second class (Upper Division) in a basic degree Examination in the relevant subject.
   
     *OR*
   - II. A Second class (Lower Division) in a basic degree Examination in the relevant subject.
   
     *OR*
   - III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant subject.
   
     *OR*
   - IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant subject

**Note :** ***Having research experience in the field of oncology will be preferable.***

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application form will be available in the Faculty website: *https://www.med.jfn.ac.lk)*. Application forms downloaded from the Faculty website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Perfected applications shall be sent to the Deputy Registrar/ Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna. Applicants are requested send the scanned copies of all the documents to the email address: fomvacancy@univ.jfn.ac.lk on or before **Friday, 30th of November 2022.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**18.11.2022**

(C-5292)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு மீண்டெழ புலம் பெயர் தமிழ் அமைப்புகள் ஒன்றுபட்டு உதவ வேண்டும்

## நீதி அமைச்சர் மீண்டும் அழைப்பு



(கொழும்பு)

**இலங்கை அரசால் தடை நீக்கம் செய்யப்பட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுபட்டு நாடு மீண்டெழ தம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்க முன்வர வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், "உள்நாட்டுப் போர் காரண மாக வடக்கு, கிழக்கிலிருந்து பெருமளவிலான தமிழ் மக்கள் பல நாடுகளுக்குப் புலம்பெயர்ந் துள்ளனர். அவர்களில் செல் வந்தர்கள் தத்தமது நாடுகளில் தனிநபர்களாவும் அமைப்புக் கள் ரீதியாகவும் செயற்பட்டு வருகின்றார்கள்.

எனினும், அவர்களுக்கி டையில் நல்லுறவு இல்லை. இங்கு தமிழ்க் கட்சிகளுக்கி டையில் பிளவுகள் இருப்பது போல் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்கிடையிலும் தனிநபர்களுக்கிடையிலும் பிளவுகள் இருக்கின்றன.

இலங்கை விவகாரத்தில் அவர்கள் அனைவரும் ஒன்று பட்டுச் செயற்பட வேண்டும். எமது நாடு மீண்டெழ தம்மா லான அனைத்து உதவிகளை யும் வழங்க அவர்கள் முன்வர வேண்டும்.

அவர்களில் சிலர் தற்போது தாமாகவே இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளார்கள். அவர்களைப் போல் ஏனைய புலம்பெயர் தமிழர்களும் ஒன் றுபட்டு இலங்கைக்கு உதவ முன்வர வேண்டும். இலங் கையில் முதலீடு செய்வது தொடர் பில் அவர்கள் தயக்கம் எதுவும் காட்டக்கூடாது. அவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு உத் தரவாதத்தை வழங்கும்.

எமது நாட்டின் வளர்ச்சிக்கு உள்நாட்டிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் அனைத்துத் தரப்பினரும் உதவிகளை வழங்க வேண்டும்" எனவும் தெரிவித்துள்ளார். (நி)

## மினுவாங்கொடையில் துப்பாக்கிச்சூடு

### இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மினுவாங்கொடை பொல் வத்த பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரி களுடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், தற்போது வெளிநாட் டில் உள்ள பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்கார ரும் குற்றவாளியுமான உர கஹா இந்திக்கவின் சகாக்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரி ஒருவர் சிகிச்சைக்காக மினுவாங் கொடை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொத்தல பிரதேசத்தில் வசிக்கும் இருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள் ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கள் யக்கலமுல்ல பிரதேசத்தில் 4 வயது சிறுவன் மற்றும் அவ ரது தந்தையை சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கள் என அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை மினு வாங்கொடை பொலிஸார் ஆரம் பித்துள்ளனர். (நி)

## யாழ்.பல்கலை இந்து பீடத்திற்கு வருடாந்தம் சுமார் 100 மாணவர்களை உள்ளீர்க்க தீர்மானம்

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்து பீடத்துக்கு தேவையான நிதி ஒதுக்கீட்டினை மேற் கொண்டு வருடந்தோறும் சுமார் 100 மாணவர்களை உள்வாங்குவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவுக்கும் துறைசார் அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவுக்குமிடையே கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலை வருக்கு அறிவிக்கப்பட்டுள் ளது.

இந்து நாகரிகம், சமஸ்கி ருதம் மற்றும் சைவ சித்தாந்தம் ஆகிய கற்கைநெறிகளைக் கொண்ட தனித்துவமான பீட மாக கடந்த 2019 ஆம் ஆண்டு இந்து பீடம் உருவாக்கப்பட்ட போதி லும் தேவையான நிதி ஒதுக் கீடு மேற்கொள்ளப்படாத நிலை யிலேயே தற்போது குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தீவிரமடையும் வைரஸ் காய்ச்சல் வலிப்பு ஏற்படும் அபாயம் அதிகரிப்பு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

சிறார்கள் மத்தியில் தற் போது பரவி வரும் வைரஸ் காய்ச்சலால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரு வதாக அரச மருத்துவ அதிகாரி கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலைமையால் சிறு வர்களுக்கு காய்ச்சலினால் வலிப்பு ஏற்படும் அபாயமும் அதிகரித்துள்ளதாக அவர் தெரி வித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே சங் கத்தின் உதவிச் செயலாளர் சிரேஷ்ட மருத்துவ அதிகாரி பாலித ராஜபக்ஷ இதனை தெரி வித்தார். ஊவா மாகாணத்தில் மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 30 வீதத்தால் அதிகரித் துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித் துள்ளது. (நி)

## ஐ.நா பிரதிநிதிகள் குழு யாழ்.மாநகர சபைக்கு விஜயம்





(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினருக்கும் யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணனுக் கும் இடையிலான சந்திப்பு நேற்று யாழ். மாநகர சபை அலு வலகத்தில் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் மற்றும் பொருளா தாரத்தை கட்டியெழுப்பும் விவ காரங்கள் திணைக்கள ஆசிய பசுபிக் பிரிவுக்கான பணிப்பாளர் பீற்றர் டியு, அரசியல் விவகார அதிகாரி அல்மா சாலியு, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக் கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஆகியோர் அடங்கிய குழுவினரே யாழ். மாநகர சபைக்கு விஜயம் செய்த னர்.

சந்திப்பின் நிறைவில் ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினருக்கு நினைவுச் சின் னமொன்றும் வழங்கிவைக்கப் பட்டது. யாழ். வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினர் பல்வேறு தரப்பு களையும் சந்தித்து கலந்து ரையாடவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (நி-6-33)

## அடுத்த வருட இறுதியில் பணவீக்கத்தை 4 - 5 சதவீதம் அளவில் பேண முடியும்

### மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய நிதிக் கொள் கைகளுக்கு அமைய அடுத்த வருட இறுதியில் பணவீக் கத்தை 4-5 சதவீதம் அளவில் பேண முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள் ளார்.


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிதி, பொருளா தார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை தொடர்பான அமைச்சர்கள் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்ததாக பாரா ளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள் ளது.

மாறுபட்ட வட்டி விகிதங்க ளின் கீழ் பெறப்பட்ட கடன் களுக்கான வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால், அசௌகரியங்களுக்கு உள் ளான வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் வங்கிகளுக்கு மத்திய வங்கி பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.டி.பி டென்னிஸ் தொடர்

## டெய்லர் ஃ பிரிட்ஸ் அரையிறுதிக்குத் தகுதி



ஆண்களுக்கான ஏ.டி.பி பைனல்ஸ் டென்னிஸ் தொடரின் குழுநிலைப் போட்டியில், அமெரிக்காவின் டெய்லர் ஃபிரிட்ஸ் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், கிறீன் பிரிவில் இடம்பெற்றுள்ள அமெரிக்காவின் டெய்லர் ஃபிரிட்ஸ் மற்றும் கனடாவின் பெலிக்ஸ் ஆகர் அலியாசிம் ஆகியோர் மோதினர்.

எதிர்பார்ப்புமிக்க இப்போட்டியில், டெய்லர் ஃபிரிட்ஸ் 7-6, 6-7, 6-2 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் இரண்டாவது அரையிறுதி குழுவிற்கு முதல் வீரராக டெய்லர் ஃபிரிட்ஸ் முன்னேறியுள்ளார்.

ஆண்கள் பிரிவில் முன்னணி டென்னிஸ் வீரர்களுக்கிடையில் நடைபெறும் ஏ.டி.பி பைனல்ஸ் டென்னிஸ் தொடர், இத்தாலியின் டூரின்- பாலா அல்பிடூரில் உள்ள உட்புற கடின தரையில் நடைபெற்று வருகின்றது. எட்டு வீரர்கள் பங்கேற்கும் இத்தொடரில், கிறீன் மற்றும் ரெட் என இரு குழுக்கள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. (6)



பளுதூக்கலில் சாதனை படைத்த வவுனியாவைச் சேர்ந்த வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

(படம்- சதீஸ்)

# சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தலைவராக கியானி போட்டியின்றி தெரிவு

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (FIFA) தலைவராக கியானி இன்பான் டினோ 2016 ஆம் ஆண்டில் இருந்து செயற்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் இன்பான் டினோ போட்டியின்றி 3 ஆவது முறையாக தெரிவு செய்யப்படுகிறார்.

அவரை எதிர்த்து யாரும் போட்டியில் இல்லை என்று FIFA தெரிவித்துள்ளது.

மேலும் இது தொடர்பான FIFAவின் அறிக்கையில், மார்ச் 16 அன்று ருவாண்டாவின் கிகாலியில் நடைபெறும் 73 ஆவது FIFA தேர்தல் நடக்கும் போது இன்பான்டினோ மட்டுமே வேட்பாளராக இருப்பார் என்றும் வேறு எந்த வேட்பு மனுவும்




சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி



யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி லயன் மகாதேவா பூமாதேவி ஞாபகார்த்த வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையேயான 14 வயதின் கீழ் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் தெரிவுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளதோடு எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை மைதானத்தில் இறுதிப் போட்டி பிற்பகல் 1 மணிக்கு குறித்த மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (6)


**உடனடி சேவை**

A/C, fridge, washing machine, Air Cooler, water heater தரமான உதிரிப் பாகங்களுடன் Spot Service

(சி-5278)

தொடர்புகளுக்கு:076 034 0301


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2733

**தர்சன்**

போராடி உயரும் வித்தையை உன் மனதுக்கு கற்பித்துப் பார்
அது தரும் உத்வேகம் உன்னைக் கொண்டு செல்லும்
வாழ்க்கையின் வெகு உயரத்திற்கு



**துசாந்த்**

அண்ணே ஏன்னே சோகமாக இருக்கிறீங்க
என் பொண்டாட்டி மூனு மாசம் என் கூட பேச
மாட்டேன்னு சொல்லிட்டாப்பா



அதுக்கு சந்தோசப்படனும் ஏன் அழுறீங்க அந்த மூனு
மாசம் இண்டையோட முடியுதுப்பா.... முடியுதுப்பா...

**மோனிகா**

ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில்
தெரிகிறது. நமக்கு எந்த ஆங்கில்ல பார்த்தாலும்
ஒன்னும் தெரிய மாட்டேங்குது




**பிரியங்கா**

இழந்தது எதுவாயினும்
அதைவிடச் சிறந்தது
கிடைக்கும் என்பது
நம்பிக்கை
கிடைத்தது எதுவாயினும்
அதுவே சிறந்தது
என எண்ணுவது
தன்னம்பிக்கை

**உதயா**

வெயில் காலத்துல மோர் பந்தல்
வைக்குற மாதிரி



குளிர் காலத்துல டீ பந்தல் வைச்சா
குறைஞ்சா போயிடுவீங்க

**கிருபிகா**

அதிக நேரம்
இருக்காது
அதிர்ஷ்டம்.
நீண்ட தூரம்
வராது சிபாரிசு.
எல்லாப் பொழுதும்
கிடைக்காது உதவி.
எப்போதும்
ஜெயிக்கும்
தன்னம்பிக்கை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓமானில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள சுமார் 90 இலங்கைப் பெண்கள்

(மஸ்கட்)

இலங்கையைச் சேர்ந்த சுமார் 90 பெண் பணியாளர்கள் ஓமானில் நிர்க்கதியாகியுள்ளதாக மஸ்கட்டில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஓமானின் மஸ்கட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு செல்லும், இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணியாளர்களிடமிருந்து நாளாந்தம் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்களில் பெரும்பாலானோர் வருகை அல்லது சுற்றுலா விசாவைப் பணி விசாக்களாக மாற்றும் நோக்கத்தில் ஓமானுக்கு சென்றுள்ளவர்களாவர்.

அவர்களில் பலர் பதிவு செய்யப்படாத முகவர்களால் மனிதக் கடத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் பல்வேறு துன்புறுத்தல்கள் உட்பட பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட இந்த பெண்கள் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதற்கான செலவுகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஏற்றுள்ளது.

இந்த பெண் தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி உள்ளிட்ட நலன்புரி வசதிகளை தூதரகம் வழங்குகிறது.

இந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்களை திருப்பி அனுப்புவதற்கு ஓமான் அதிகாரிகளுடன் தொடர்ந்து செயலாற்றி வருகிறது என இலங்கை தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக இந்த ஆண்டில், 240 இற்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்களை நாடு திரும்புவதற்கு தாம் உதவியுள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது. (நி)

# 1,283 நிறுவனங்கள் அரசாங்கத்தின் கீழ்

(கொழும்பு)

இலங்கை பாராளுமன்றத்தில் முதன்முறையாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் அரசுக்குச் சொந்தமான 420 நிறுவனங்கள் உட்பட ஆயிரத்து 283 நிறுவனங்கள் அரசாங்கத்தின் கீழ் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 29 அமைச்சகங்களும் 99 துறைகளும் அடங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து அரச நிறுவனங்களையும் பட்டியலிடும் ஆவணமொன்றை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் இவ்வாறானதொரு ஆவணம் நாட்டுக்கு தெரியப்படுத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது சமீபத்திய வரவு-செலவுத் திட்ட உரையின்போது வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் இந்த ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அமெரிக்காவின் முதலாவது பயணிகள் கப்பல் கொழும்பில்



(கொழும்பு)

அமெரிக்காவின் முதலாவது சொகுசு பயணிகள் பயணக் கப்பலான 'வைக்கிங் மார்ஸ்' நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

900 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கை வந்துள்ள குறித்த கப்பலானது இன்று வரை கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ளது.

கப்பலில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் முக்கிய இடங்களை பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கண்டி, பின்னவெல, காலி போன்ற நகரப் பயணங்கள் மற்றும் கொழும்பின் சில முக்கிய இடங்களுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (நி)

# நாளொன்றிற்கு ஐம்பது சாரதி அனுமதிப்பத்திரங்கள்

## விநியோகத்தில் மட்டுப்பாடு

(கொழும்பு)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் சாரதி அனுமதிப்பத்திர அலுவலகத்தில் நாளொன்றுக்கு 50 சாரதி அனுமதிப்பத்திரங்கள் மட்டுமே தற்போது வழங்கப்படுவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரு நாள் சேவையில் நாளொன்றுக்கு 50 சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டபோதிலும், திடீர் வெளிநாட்டுப் பயணம் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்த அவர், ஏனைய விண்ணப்பதாரர்கள் சாதாரண சேவையின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் அட்டைகளுக்குத் தட்டுப்பாடு இல்லாதபோது, ஒரு நாள் சேவையின் கீழ் நாளொன்றுக்கு சுமார் 1,500 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)


# வட இலங்கைச் சங்கீத சபை

## மருதனார்மடம்-சுன்னாகம்

### 2022 ஆம் ஆண்டுக்கான அறிமுறைப் பரீட்சை

வட இலங்கைச் சங்கீத சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான அறிமுறைப் பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் **கீழ் குறிப்பிடப்படும் நேரசூசிக்கு அமைவாக** அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் என்பதை பரீட்சார்த்திகளுக்கு அறியத் தருகின்றேன்.

**அறிமுறைப் பரீட்சை நேர அட்டவணை**

| திகதி | பாடம் | தரம் | காலம் (Duration) | |
|---|---|---|---|---|
| | | | காலை | மாலை |
| 20.11.2022 ஞாயிறு | சங்கீதம் | 2, 3, 4 | 8.30 – 11.30 | |
| | மிருதங்கம் | 2, 3, 4 | | 13.00 – 16.00 |
| | | | | |
| 27.11.2022 ஞாயிறு | பரதம் | 2, 3, 4 | 8.30 – 11.30 | |
| | பண்ணிசை | 2, 3, 4 | | 13.00 – 16.00 |
| | நாடகமும் அரங்கியலும் | 2, 3, 4 | | 13.00 – 16.00 |

**மு.இராதாகிருஸ்ணன்**
**தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை**
**மருதனார்மடம் - சுன்னாகம்.**

(C-5291)


# இராசிபலன்

19.11.2022
கார்த்திகை 03, சனிக்கிழமை
தசமி முற்பகல் 7.57 மணிவரை

உத்தரம் முன்னிரவு 10.33 மணிவரை
சுபநேரம் 3.09-4.39 மணிவரை
இராகுகாலம் 9.09-10.39 மணிவரை

சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி

வளவன்





காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், கௌரவமான நாள்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.




நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.




வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.




பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும்.




வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்ப ஒற்றுமை கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

எல்லோரையும் [illegible] செவிமடு, முடிவை நீ எடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவனை துன்புறுத்திய சந்தேகநபர் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் உள்ள 12 வயதுச் சிறுவனை துன்புறுத்திய குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சிறுவனிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தையடுத்து சந்தேகநபர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

இல்லத்தில் காப்பாளராகப் பணியாற்றும் 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மன்னாரைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகளின் பின் சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (நி-6-104)



நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் நிதி பங்களிப்பில் யாழ்.போதனா மருத்துவமனையின் எலும்பு முறிவு சத்திர சிகிச்சைப் பிரிவின் தேவைக்காக ஒன்பது இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான புதிய உபகரணத்தை கொள்வனவு செய்யத் தேவையான நிதி நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினால் மருத்துவமனை பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் யமுனானந்தாவிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது. (படம்- சிவசாந்தன்)

## வளவாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவலக அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கலாசார மத்திய நிலையத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறிகளான சங்கீதம், பரத நாட்டியம், சித்திரம், நாடகமும் அரங்கியலும், வயலின், மிருதங்கம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுய விபரக்கோவையினை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பதாக கலாசார மத்திய நிலையம் 15 ஆம் கட்டை உடுப்பிட்டி தெற்கு உடுப்பிட்டி என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம். நேர்முகத்தேர்விற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என உடுப்பிட்டி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (நி-6)

# மயிர்க்கொட்டி பட்டதில் மாணவிகளுக்கு ஒவ்வாமை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 4 மாணவிகளுக்கு மயிர்க்கொட்டி பட்டதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை பேருந்தில் வரும்போதே குறித்த மாணவிகள் மயிர்க்கொட்டியின் தாக்கத்திற்கு உள்ளாகி கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும் சிகிச்சையின் பின்னர் அவர்கள் குணமடைந்து வீடு சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி-6-30)

# சாவகச்சேரி பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது வாக்கெடுப்பின் போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் சபை மண்டபத்தில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் 25 உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிலையில் பாதீட்டுக்கு ஆதரவாக 17 உறுப்பினர்களும் எதிராக ஒரு உறுப்பினரும் வாக்களித்திருந்தனர்.

அதேவேளையில் 7 உறுப்பினர்கள் குறித்த வாக்கெடுப்பின் போது நடுநிலைமை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)



யா/பிளவத்தை அ.மி.த.க பாடசாலையில் கற்பகச்சோலை மக்கள் ஒன்றியம் – சுவிஸ் அமைப்பினரின் அனுசரணையில் வடிவமைக்கப்பட்ட திறன் வகுப்பறையானது கடந்த திங்கட்கிழமை பாடசாலையின் முதல்வர் மா.முருகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் நிறுவனம் மற்றும் பொது முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஞா.ந.ஆதவன் கலந்து கொண்டு வகுப்பறையைத் திறந்து வைத்தார்.

# வீட்டினுள் நுழைந்த திருட்டுக் கும்பல் 2 1/2 பவுண் நகைகளை சூறையாடியது

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரிய விளான் பகுதியில் உள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடர்களால் 2 1/2 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருகையில் குறித்த வீட்டிற்குள் நுழைந்த திருட்டுக் கும்பல் வீட்டில் இருந்தவர்களை பொல்லுகளால் அடித்து அச்சுறுத்தி அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளை பறித்துத் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இதன்போது வீட்டு உரிமையாளர் தலையில் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (நி-6-104)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை இரத்த வங்கியின் தேவை கருதி கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள குட்டிச்சுட்டி முன்பள்ளியில் இடம்பெறும். (நி-6)

# தேசிய கல்வி நிறுவகத்தின் புத்தகக் கண்காட்சி நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் தேசிய கல்வி நிறுவகத்தினால் அச்சிடப்பட்ட புத்தகக் கண்காட்சியும். புத்தக விற்பனை நிகழ்வும் நேற்று யாழ். மத்திய கல்லூரி றொமைன் மண்டபத்தில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஜே.பிறட்லி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்தக் கண்காட்சியானது இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறும் என்பதுடன் இதன்போது புத்தகங்கள் 20% விலைக் கழிவுடன் விற்பனை செய்யப்படவுள்ளன. இதில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-6-33-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 420 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 120 | 200 | 150 |
| தக்காளி | 450 | 450 | 450 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 150 | 160 |
| கோவா | 400 | 300 | 280 | 320 |
| கரட் | 350 | 420 | 500 | 500 |
| பூசணி | 180 | 150 | 140 | 150 |
| புடோல் | 320 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 550 | 450 | 550 | 700 |
| பெரிய வெங்காயம் | 320 | 320 | 320 | 350 |
| பாகற்காய் | 600 | 700 | 450 | 500 |
| வெண்டக்காய் | 200 | 140 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 110 | 130 | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 380 | 500 |
| லீக்ஸ் | 350 | 320 | 360 | 400 |
| பீற்றூட் | 200 | 300 | 280 | 400 |
| கறிமிளகாய் | 700 | 750 | 700 | 700 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 350 | 400 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 450 | 250 | — | 360 |
| கீரை - 1 பிடி | 140 | 140 | 200 | 200 |
| தேசிக்காய் | 400 | 350 | 450 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 250 | 260 | 250 |
| வெங்காயப்பூ | — | — | 400 | — |
| முள்ளங்கி | 140 | 120 | 160 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 120 | 130 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளின் விடுதலைக்கு எதிராக மறு ஆய்வு மனுத்தாக்கல்

(டில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை குற்றவாளிகள் நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்டோரை விடுதலை செய்ததற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் இந்திய அரசு சார்பில் மறு ஆய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை குற்றவாளியான பேரறிவாளன் சிறை நன்னடத்தை, சிறையில் இருந்தபடி கல்வி கற்றது உள்ளிட்ட பல்வேறு காரணங்களைக் காட்டியும், ஆளுநர் அவரது விடுதலை குறித்த தமிழக அரசின் அமைச்சரவை முடிவின் மீது எந்த முடிவும் எடுக்காமல் கால தாமதம் செய்ததையும் சுட்டிக் காட்டியும், உச்ச நீதிமன்றத்தால் அதன் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இதை அடிப்படையாகக் கொண்டு சாந்தன், முருகன், நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் மற்றும் ஜெயக்குமார் உள்ளிட்ட சிறையில் இருந்த மற்றக் குற்றவாளிகள் 6 பேரும் கடந்த 12 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தால் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பாலஸ்தீன அகதிகள் முகாமில் தீ; 9 சிறுவர்கள் உட்பட 21 பேர் பலி

(காஸா)

பாலஸ்தீனத்தின் காஸா பிராந்தியத்தில் ஏற்பட்ட தீப் பரவலில் குறைந்தபட்சம் 21 பேர் பலியானதுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

காஸாவின் வடபகுதியிலுள்ள ஜபாலியா அகதிகள் முகாமில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. இறந்தவர்களில் 9 சிறுவர்கள் அடங்கியுள்ளனர். (நி)


## மாநகர எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல்-2023

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் இதுவரை பதிவு செய்யாத நிறுவனங்கள் மற்றும் 2022 ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்ட நிறுவனங்கள் 2023 ஆம் ஆண்டுக்கான பதிவுகளை 01.12.2022 தொடக்கம் 30.12.2022 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் 2,300.00 (2,000.00 + VAT 15%) ரூபாவினை திட்டமிடல் பிரிவில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், யாழ்.மாநகர சபையில் பதிவினை மேற்கொள்ளாது குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

முதல்வர்,
யாழ்.மாநகர சபை.

(C-5290)


# கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவியது வடகொரியா

(பியாங்யாங்)

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை என சந்தேகிக்கப்படும் நீண்ட தூர வீச்சுடைய ஏவுகணையொன்றை வடகொரியா நேற்று சோதனை செய்துள்ளதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் பெருநிலப்பரப்பை அடையக்கூடிய வீச்செல்லையை இந்த ஏவுகணை கொண்டிருக்கலாம் எனவும் ஜப்பான் தெரிவித்துள்ளது.

ஜப்பானுக்குரிய பொருளாதார



வலயத்துக்குள் இந்த ஏவுகணை வீழ்ந்ததாக நம்பப்படுவதாகவும் இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நடவடிக்கை எனவும் ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிதா தெரிவித்தார். (நி)


## படவரைஞர்களைப் பதிவு செய்தல்-2023

யாழ்.மாநகர சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் NVQ- 5 சான்றிதழுடன் எதிர்வரும் 01.12.2022 தொடக்கம் 30.12.2022 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் 2,300.00 (2000.00+Vat 15%) ரூபாவினை திட்டமிடல் கிளையில் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பு

1. NVQ 5 சான்றிதழ் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
2. மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.

முதல்வர்,
யாழ்.மாநகர சபை.

(C-5289)


# கார்த்திகை மாத இராசி பலன்கள் 17.11.2022-15.12.2022

## மிதுனம்

**எதையும் திட்டமிடாது செய்து வெற்றியைப் பெறும் மிதுன இராசி வாசகர்களே!**

அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. பொருளாதார நெருக்கடி அதிகரிக்கும். புது முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படும். எதிலும் விழிப்புணர்ச்சி தேவைப்படும் நேரம் இது.

**சனி மற்றும் குருவின் சஞ்சாரம்**

மாதத்தின் முற்பகுதியில் தைரியமும் தன்னம்பிக்கையும் வெற்றியைத் தேடித் தரும். 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு, 10 ஆம் இடத்தில் பலம் பெற்றிருக்கிறார். "10 இல் குரு வரும்பொழுது பதவி மாற்றம் வரும்" என்பார்கள். எனவே உத்தியோகத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, ஊர் நலத்தில் அக்கறை கொண்டு செயற்படுபவராக இருந்தாலும் சரி, திடீரெனப் பொறுப்புகளும் பதவிகளும் மாற்றப்படலாம். ஒரு சிலருக்கு இனிமை தராத மாற்றங்கள் ஏற்பட்டு இதயத்தை வாட வைக்கும்.

**தனுசு - புதன் சஞ்சாரம்**

கார்த்திகை 12 ஆம் திகதி புதன், சப்தம ஸ்தானத்திற்கு வரும்பொழுது மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். தெள்ளத் தெளிவாக சிந்தித்து முடிவெடுத்து, திட்டமிட்ட காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தும் நேரம் இது. தாயின் உடல் நலம் சீராகும். பெற்றோரின் ஒத்துழைப்போடு சில பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு உண்டு.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

கார்த்திகை 13 ஆம் திதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் 12 இல் சஞ்சரிக்கும் இந்த நேரம், "விபரீத ராஜயோக" அடிப்படையில் சில நல்ல மாற்றங்கள் வரப் போகிறது. குறிப்பாக திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திடீரென எடுக்கும் முடிவுகளால் வருமானம் உயரும். என்றைக்கோ குறைந்த விலையில் வாங்கிப் போட்ட இடம், பலமடங்கு விலை உயர்ந்து உங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தப் போகிறது.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

கார்த்திகை 21 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார். இதனால் பிள்ளைகளின் திருமணப் பேச்சுக்கள் முடிவாகி மகிழ்ச்சி தரும். நல்லவர்களின் நட்பால் குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். தொழில் வெற்றி நடைபோடும். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவர். கடன் சுமை குறையும். கணிசமான தொகை கைகளில் புரளும். இம்மாதம் புதன் கிழமை தோறும் விஷ்ணு, லட்சுமி வழிபாடு உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்.

## கடகம்

**பிறருக்கு சேவை செய்வதை பெருமையாகக் கருதும் கடக இராசி வாசகர்களே!**

திட்டமிட்டபடியே எதையும் செய்ய இயலாது. திடீர் மாற்றங்களால் மனக் கலக்கம் ஏற்படும்.

**சனி மற்றும் குருவின் சஞ்சாரம்**

மாதத்தின் முற்பகுதியில் உங்களுக்கும் மந்த நிலை காணப்படும். திடீரென வீறுகொண்டு எழுந்து செயற்படுவீர்கள். பாதி செயற்படும் பொழுதே உற்சாகமும் தன்னம்பிக்கையும் இழந்து உட்கார்ந்து விடுவீர்கள். வாழ்க்கைத் துணை வழியிலும் குடும்ப உறுப்பினர்கள் மூலமும் பிரச்சினைகள் வந்து அலைமோதும். எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது.

**தனுசு - புதன் சஞ்சாரம்**

கார்த்திகை 12 ஆம் திகிதி புதன், 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது மிகப்பெரிய மாற்றங்கள் வந்து சேரும். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வந்து சேரலாம். உத்தியோகம் சம்பந்த மாக அல்லது தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். எதிரிகளின் பலம் குறையும். இந்த நேரத்தில் பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். நண்பர்கள் உங்கள் சிக்கல்கள் தீர வழிவகுத்துக் கொடுப்பர். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைகளைக் கண்டு மேலதிகாரிகள் வியப்பர். இனிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும்.

**ரிஷப- செவ்வாய் சஞ்சாரம்**

கார்த்திகை 13 ஆம் திகதி செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பொருளாதார நிலை உயரும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். அருளாளர்களின் சந்திப்பால் நல்ல மாற்றங்களை காண்பீர்கள். அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடை பெறும். சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. "வாங்கிய சொத்தை விற்று விட்டோமே" என்று கவலைப்பட்டவர்களுக்கு மீண்டும் சொத் துக்கள் வாங்கும் அமைப்பு உருவாகும்.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

கார்த்திகை 21 ஆம் திகதி சுக்கிரன், 6 ஆம் இடத்திற்கு வரும்பொழுது உடல் நலனில் கவனம் தேவை. உடன் இருப்பவர்களால் பிரச்சினைகள் உருவாகலாம். வருமான பற்றாக்குறையின் காரணமாக ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்பு கிடைக்கும். உங்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பு களை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். இம்மாதம் திங்கட்கிழமை தோறும் முருகப்பெருமானை முத்தமிழ் பாடி வணங்குவதன் மூலம் தித்திக்கும் வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 32





உங்களுக்கெல்லாம் அதிக வரி போட்டு வசூலிக்கும் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்படுகிறது. இதற்காகத் தான் என்னை இறை அதிகாரியாக நியமித்திருக்கிறார்கள்! சோழ நாட்டின் மேன்மையே முக்கியம் என்று நான் கருதியிராவிட்டால், எப்பொழுதோ இப்பதவியை விட்டுத் தொலைத்திருப்பேன்."

"ஆ! கூடவே கூடாது! தாங்கள் இப்பதவியிலிருப்பதுதான் எங்களுக்கெல்லாம் பெரிய பாதுகாப்பு. இந்த முறைகேடான காரியங்களைப் பற்றித் தாங்கள் மகாராஜாவிடம் சொல்லிப் பார்க்கவில்லையா?"

"சொல்லாமல் என்ன! பல தடவை சொல்லியாகிவிட்டது. ஒவ்வொரு தடவையும் பெரிய பிராட்டியிடம் கேளுங்கள்; இளையபிராட்டியிடம் கேளுங்கள்!" என்ற மறுமொழிதான் கிடைக்கிறது. முன்னமே தான் சொன்னேனே, மகாராஜாவுக்குச் சுயமாகச் சிந்தனை செய்யும் சக்தியே இப்போது இல்லாமல் போய்விட்டது!

முக்கியமான காரியங்களில் நம்முடைய யோசனைகளைக் கேட்பதும் இல்லை. அவருடைய பெரியன்னை செம்பியன் மாதேவியின் வாக்குத்தான் அவருக்கு வேதவாக்கு; அடுத்தபடியாக, அவருடைய செல்வக் குமாரி குந்தவைப்பிராட்டியிடம் யோசனை கேட்கச் சொல்கிறார்.

இராஜ்ய சேவையில் தலை நரைத்துப் போன நானும் மற்ற அமைச்சர்களும் அந்தச் சின்னஞ் சிறு பெண்ணிடம் கொள்ளிடத்துக்கு வடக்கேயும் குடமுருட்டிக்குத் தெற்கேயும் சென்றறியாத பெண்ணிடம் யோசனை கேட்பதற்குப் போய் நிற்க வேண்டும்; எப்படியிருக்கிறது கதை! இந்தச் சோழ ராஜ்யம் ஆரம்பமான காலத்திலிருந்து இப்படி இராஜ்ய காரியங்களில் பெண்கள் தலையிட்டதாக நாம் கேள்விப்பட்டதில்லை!

இத்தகைய அவமானத்தை எத்தனை நாள் நாம் பொறுத்திருக்க முடியும்? அல்லது நீங்கள் எல்லாரும் ஒருமுகமாகச் சொன்னால், நான் இந்த இராஜாங்கப் பொறுப்பையும், வரி விதித்துப் பொக்கிஷத்தை நிரப்பும் தொல்லையையும் விட்டு விட்டு என் சொந்த ஊரோடு இருந்து விடுகிறேன்.

"கூடாது! கூடாது! பழுவூர்த்தேவர் அப்படி எங்களைக் கைவிட்டு விடக் கூடாது. அரும்பாடுபட்டு, ஆயிரமாயிரம் வீரர்கள் நாலு தலைமுறைகளாகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தி ஸ்தாபித்த சோழ சாம்ராஜ்யம் ஒரு நொடியில் சின்னாபின்னமாய்ப் போய் விடும்" என்றார் சம்புவரையர்.

"அப்படியானால் இந்த நிலைமையில் என்ன செய்வது என்று நீங்கள் தான் எனக்கு யோசனை சொல்ல வேண்டும். அல்லி ராஜ்யத்தைவிடக் கேவலமாகிவிட்ட இந்தப் பெண்ணரசுக்குப் பரிகாரம் என்ன என்று நீங்கள் தான் சொல்ல வேண்டும்" என்றார் பழுவூர் மன்னர்.

## எட்டாம் அத்தியாயம்
## பல்லக்கில் யார்?

சற்று நேரம் அந்தக் கூட்டத்தில் ஒருவருக்கொருவர் ஏதோ பேசி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். பல குரல்கள் ஒருங்கே கலந்து ஒலித்தபடியால் வந்தியத்தேவன் காதில் ஒன்றும் தெளிவாக விழவில்லை.

சம்புவரையர் உரத்த குரலில், "பழுவூர் மன்னர் கேட்டதற்கு நாம் மறுமொழி சொல்ல வேண்டாமா? தலைக்குத் தலை பேசிக் கொண்டிருந்தால் என்ன ஆகிறது? இரவு மூன்றாம் ஜாமம் ஆரம்பமாகி விட்டது. அதோ சந்திரனும் வந்து விட்டது" என்றான்.

"எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. என்னைப் போல் இன்னும் சிலருடைய மனத்திலும் அது இருக்கலாம். பழுவூர்த்தேவர் கோபித்துக் கொள்வதில்லையென்றால், அதைப் பற்றிக் கேட்க விரும்புகிறேன்!" என்று முன்னால் ஒரு தடவை பேசிய கம்மல் குரல் சொல்லிற்று.

"இப்போது பேசுகிறது வணங்காமுடியார் தானே? எழுந்து நன்றாக வெளிச்சத்திற்கு வரட்டும்!" என்றார் பழுவேட்டரையர். ஆமாம்; நான் தான் இதோ வெளிச்சத்துக்கு வந்து விட்டேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## புவன சுந்தரி



(நேற்றைய தொடர்ச்சி...)

ஆனால் ரூபதரன் கப்பலில் போய்விட்டு எதுவுமே கொண்டு வராமல் திரும்பி வந்தான்.

அது கண்டு கிரேக்க வீரர்களில் ஒருவனான பிரபோதன் என்பவன் ரூபதரனை "சோம்பேறி, உதவாக்கரை, கையாலாகாதவன் என்றெல்லாம் திட்டினான். ரூபதரனோ "நான் என்ன செய்வேன்? எங்கும் உணவு தானியமே இல்லை. ஒரு வேளை நீ போயிருந்தால் உனக்குக் கிடைத்திருக்கலாம்" என்றான். அது கேட்டு ரோஷம் கொண்ட பிரபோதன் "நான் போய் உணவு தானியம் கொண்டு வருகிறேன் பார்" என்று கூறிக் கப்பல் ஏறிச் சென்றான். அவன் ஒரு கப்பல் நிறை தானியம் கொண்டு வரவே ரூபதரன் தலை குனிந்து கொண்டான்.

அவனுக்குப் பிரபோதன் மீது கோபம் வந்தது. அவனை எப்படிப் பழி வாங்குவது என்று ரூபதரன் யோசித்துப் பார்த்தான். முடிவில் அவன் ஒரு வழியையும் வகுத்தான்.

ஒரு நாள் அவன் ராஜராஜனிடம் "நேற்றிரவு கனவில் ஒரு தேவதை தோன்றி நம் கூடாரத்தில் ஒரு துரோகி இருப்பதாகக் கூறி எச்சரித்தது. அதனால் ஆபத்து வருவதைத் தவிர்க்க நாம் நம் முகாமை நாளை ஒரு நாள் மட்டும் மாற்றி விட வேண்டும்" என்றான். அது கேட்டு ராஜராஜனும் உடனே முகாமை மாற்றினான். கிரேக்க வீரர்கள் அனைவரும் வேறு இடத்திற்குப் போய் ஒரு பகல் ஒரு இரவைக் கழித்தார்கள்.

எல்லோரும் முகாமை விட்டுப் போனதும் ரூபதரன் யார் கண்ணிலும் படாமல் பிரபோதனின் கூடாரத்திற்குள் சென்று ஒரிடத்தில் தங்க நாணயங்கள் நிறைந்த ஒரு பையை ஒளித்து வைத்தான்.

பிறகு ஒரு போர்க் கைதியை நிர்ப்பந்தப் படுத்தி ஒரு கடிதம் எழுதி வைத்தான். அது வர்த்தகன் பிரபோதனுக்கு எழுதியது போல அமைக்கப்பட்டது. "கிரேக்கர்களை காட்டிக் கொடுக்க நீ கேட்ட தொகையை நான் அனுப்பி இருக்கிறேன்" என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

ரூபதரன் அந்தக் கைதியிடம் "நீ இப்போதே போய் இக்கடிதத்தைப் பிரபோதனிடம் கொடுத்துவிடு" எனக் கூறி அனுப்பினான். ஆனால் ரூபதரன் அக்கைதியை நடுவழியில் தன் ஆட்களை வைத்துக் கொன்று விட்டான். மறுநாள் கிரேக்க வீரர்கள் தம் முந்தைய முகாமிற்கு திரும்பி வந்தார்கள்.

வழியில் அவர்கள் ஒரு போர்க் கைதி இறந்து கிடப்பதை கண்டு அவனது உடலைப் புரட்டிப் பார்த்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.
~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புற்றுநோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுக் கொடுங்கள்

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்குத் தேவையான மருந்துகள் முற்றாகத் தீர்ந்துவிட்டதாகவும் இதனால் புற்றுநோயாளர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

குறித்த மருந்துகளை புற்றுநோயாளர்களுக்கு வழங்குவதன் மூலம் நோய் உபாதையிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதுடன் அவர்களின் ஆயுளையும் நீடிக்க முடிகிறது.

இந்நிலையில் அந்த மருந்துகள் வைத்தியசாலையில் இல்லையெனும்போது, குறித்த மருந்துகளை தனியார் மருந்தகங்களில் அதிகூடிய விலைகளில் வாங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது.

இவ்வாறான நிலைமைக்கு எல்லாப் புற்றுநோயாளர்களும் ஈடுகொடுக்க முடியாதென்பது தெரிந்த விடயம்.

குறிப்பாக அதிகூடிய விலையில் குறித்த மருந்துகளை வாங்க முடியாத ஏழைகளால் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.

அதிலும் தமக்கான மருந்துகளை வாங்க முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் இருக்கக்கூடிய புற்றுநோயாளர்களின் மனநிலையை ஒரு கணம் நாம் சிந்திப்போமாயின், அதன் வலி எத்துணை துன்பமானதென்பதை எம்மால் உணர முடியும்.

எனவே இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில் புற்றுநோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை ஒரு செய்தியாக மட்டும் நாம் பார்க்க முடியாது.

ஆகையால் குறித்த மருந்து வகைகளை பெற்றுக்கொடுக்கின்ற மனிதாபிமான நடவடிக்கையை நாம் உடனடியாகச் செய்தாக வேண்டும்.

பொதுவில் நீண்ட நெடுங்கால யுத்தம் நம் தமிழ் மக்களை பல்வேறு வழிகளில் பாதித்த போதும் நாம் வீழாமல் எழுந்து நிற்கிறோமென்றால் அதற்கு எம் மக்களிடம் இருக்கக்கூடிய இரக்க மனமும் பிறர் துன்பம் கண்டு துடிக்கும் உள்ளமும் பரோபகார சிந்தையும் காரணம் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

ஆம் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்விக்கு, குடும்பத் தலைவனை இழந்தவர்களின் சீவனோபாயத்துக்கு, அங்கவீன முற்றவர்களின் வாழ்வுக்கு, முதியோர் இல்லங்களுக்கு, சிறுவர் காப்பகங்களுக்கு என்று அள்ளிக் கொடுக்கின்ற கருணை உள்ளவர்கள் ஏராளம் பேர் இங்கும் புலம்பெயர் நாடுகளிலும் இருக்கின்றனர்.

அவர்களின் ஈகை வெளியில் வராத பெருங்கொடையாய் அமைந்து பலரைத் தாங்கி நிற்கிறது.

இந்த வேளையில் முக்கியமான மருந்துகளின் பற்றாக்குறையால் தவிக்கின்ற புற்றுநோயாளர்களுக்கு உதவுவதற்கு கருணை உள்ளம் படைத்தவர்கள் முன்வர வேண்டும்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு தேவையான மருந்துகளை உடன் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே நம் தாழ்மையான கோரிக்கை.

## கடலுக்கு செல்லாதீர்கள் மீனவர்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு பிரதேசத்திற்கு நாளை மறுதினம் 21ஆம் திகதி வரை கடற்றொழிலுக்கு செல்வதை தவிர்க்குமாறு மீனவர்களுக்கு, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மீனவர்களை உடனடியாக கரைக்குத் திரும்புமாறு அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தென்கிழக்கு வங்கக் கடலிலும் அதனை அண்டிய வடக்கு அந்தமான் கடற்பிராந்தியத்திலும் உருவாகியுள்ள குறைந்த காற்றமுழுத்த தாழ்வு மண்டலம் இன்று காற்றமுத்த தாழ்வு மண்டலமாக மாற்றமடையலாமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த குறைந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் வடமேற்கு திசையில் நகர்ந்து, நாட்டின் வடக்கு கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் அதிகம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணிக்கு 60 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## மரக்கடத்தல் முறியடிப்பு ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக வேப்பமர குற்றிகளைக் கொண்டு சென்றவர் கோப்பாய் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரந்தன் சந்தியில் வைத்து கோப்பாய் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வேப்பமரக்குற்றிகளை ஏற்றி வந்த வாகனமும், வேப்பமரக் குற்றிகளும் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (4,7,104)

## ஓமான் தூதரக அதிகாரி பணி இடைநீக்கம்

சுற்றுலா விசா ஊடாக ஓமானுக்கு அழைத்துச் செல்லப்படும் இலங்கைப் பெண்கள் அங்கு விற்பனைச் செய்யப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில், இலங்கைக்கான ஓமானிய தூதரகத்தில் பணியாற்றும் இரண்டாம் நிலை உயரதிகாரி ஒருவர் அதிரடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பணிநீக்கப்பட்ட அதிகாரி இலங்கைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதேவேளை சுற்றுலா விசாவை பயன்படுத்தி ஓமானுக்கு அழைத்துச் செல்லப்படும் இலங்கைப் பெண்கள் அங்கு விற்பனை செய்யப்படுவதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்த கடத்தல் சம்பவத்தில் இலங்கையின் விமான நிலையத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் தொடர்பு கொண்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அத்துடன், ஓமானில் பணியாற்றும் தூதரக அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதன் அடிப்படையிலேயே ஓமானில் பணியாற்றும் இலங்கை தூதரக அதிகாரி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ஆசிரியர் தாக்கியதில் மாணவன் மருத்துவமனையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவரை ஆசிரியர் தாக்கியதில் குறித்த மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, குறித்த மாணவனை தடிகளால் பலமுறை தாக்கிய ஆசிரியர் தடி முறிந்த நிலையில் தனது கையால் மாணவனின் நெற்றியில் அறைந்துள்ளார் எனவும் தெரியவருகிறது. (4,7,104)

## இரத்தப் பரிசோதனைகள் திடீர் நிறுத்தம் நோயாளர்கள் அவதி

இரசாயனப் பதார்த்தங்களின் பற்றாக்குறையால் இரத்தப்பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக பல வைத்தியசாலைகள் தெரிவித்துள்ளன.

அந்தவகையில் லேடிரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, காசல் வீதி மகளிர் வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் இவ்வாறு இரத்தப் பரிசோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால், தனியார் ஆய்வகங்களில் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய நிலைக்கு நோயாளர்கள் தள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை, இரசாயனப் பதார்த்தங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டாலும் வைத்தியசாலை அமைப்பு வீழ்ச்சியடையாது என காசல் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (4-7)

## கைதடி நெற்செய்கையாளர்களுக்கு இலவச யூரியா உர விநியோகம்

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட 12 பரப்பிற்கு உட்பட்ட வயல் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் சிறிய விவசாயிகளுக்கு இலவச யூரியா உரம் வழங்கப்படுவதாக கமக்கார அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

அரச உத்தியோகம் அல்லாத சிறிய நெற்செய்கையாளர்களுக்கு நேற்று முன்தினம் தொடக்கம் நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் இலவசமாக 50 கிலோகிராம் யூரியா உரம் வழங்கப்படுவதாகவும், குடும்ப அட்டையை காண்பித்து குறித்த உரத்தினை கைதடி கமநல சேவை நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என தெரியப்படுத்தியுள்ளனர்.

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குள் 170 விவசாயிகள் குறித்த உரத்தை பெறத்தகுதியுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-6-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் விளான், அரசடி சந்தி, சங்கானை, சங்கானை வைத்திய சாலை, சங்கானை சந்தை, நிச்சாமம், தொட்டிலடி, வல்லை வீதி-சங்கானை ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2022

"ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்."
-அமிர் றே (இந்திய ஆன்மீகக் குரு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# விடுதலையானவர்கள் விடுதலை வாழ்வை முழுமையாக அனுபவிக்க வேண்டும்

## அருட்தந்தை சக்திவேல்

(நெளுக்குளம்)

ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை பெற்ற இலங்கையைச் சேர்ந்த நால்வரும் முழுமையான விடுதலை வாழ்வை அனுபவிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை பெற்ற இலங்கையைச் சேர்ந்த நால்வரும் முழுமையான விடுதலை வாழ்வை அனுபவிக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பாக நால்வரின் விருப்பத்திற்கு அமைய தீர்மானிக்க வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு தமிழக அரசிடமும் இந்திய மத்திய அரசிடமும் வேண்டுகோள் விடுகின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-299)



கொரிய அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் இரண்டு மாடிக்கட்டடம் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் ரா.வரதீஸ்வரன், மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், கிளிநொச்சி தெற்கு வலயத்தின் வலயக்கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த கட்டடத்தினை திறந்து வைத்தனர். (படம்: தேவானந்தம்)

## 121 போதைப் பாவனையாளர்களுக்கு புனர்வாழ்வு

(நெளுக்குளம்)

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் போதை பாவனைக்கு அடிமையாகிய 121 பேர் நீதிமன்ற உத்தரவின் பேரில் தங்க வைக்கப்பட்டு புனர்வாழ்வுக்கு உட் படுத்தப்பட்டு வருகின்றனர்.

வடபகுதியைச் சேர்ந்த இளைஞர்களே போதைக்கு அடிமையாகிய நிலையில் பொலிஸாரால் அழைத்து வரப்பட்டு தங்கவைக்கப்பட்டு புனர்வாழ்வுக்கு உட்பட்டு வருகின்றனர்.

இவர்களில் கடந்த 15 ஆம் திகதி ஐவர் குறித்த புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பித்துச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)

## நிர்வாக சபைத் தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. கோவிற்குடியிருப்பு கடற்றொழில் ஓய்வு மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோரது பங்குபற்றுதலுடன் புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

## மனவளக்கலை பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்.அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறி .வுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும். (6)

# ஜனாதிபதியின் விஜயம் அரசியல் நோக்கம் கொண்டது

## மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சமாசம்

(மன்னார்)

ஜனாதிபதியின் மன்னார் விஜயம் இங்குள்ள மக்களின் பிரச்சினையை அறிவதை விட மாவட்டத்தில் இருக்கின்ற வளங்களை எவ்வாறு அரசிற்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ள முடியும் அல்லது எவ்வாறு அந்த வளத்தை இன்னும் ஒருவருக்கு கையளிக்கலாம் என்ற நோக்கத்துடன் அவரது வருகை மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ளது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பேச்சாளரும் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளருமான என்.எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்திற்கு நாளை ஞாயிற்றுக்கிழமை வருகை தர உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நேரடியாக தெளிவுபடுத்தும் வகையில் அவருடன் சந்திப்பை மேற்கொள்ள இருந்த சந்தர்ப் பத்தில் அவ்வாறான சந்திப்பு தவிர்க் கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-6-285)

# கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி நகரில் அண்மையில் இளம் குடும்பஸ்தர் ஒருவரை அடித்து கொலை செய்த சம்பவத்துடன் தொடர்பட்ட சந்தேகநபர் ஒருவரை கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி நகரின் மின்சார சபை முன்பாகவுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த குடும்பஸ்தர் சிகிச்சைப் பலனின்றி உயிர் இழந்துள்ளார். கொலைச் சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் கிளிநொச்சி இரணைமடுவில் அமைந்துள்ள மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் பிரதான சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் கொழும்பில் வைத்து கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கை கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: சூரி 12செவ் 11 இல்
தகைமை/தொழில்: A/L Auto Mobile Technology (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்
தொ.இ: B/13112

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: சூரி 10 செவ் 11 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: QS (நில அளவையாளர்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/13113

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: சூரி 5 செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/13114

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: சூரி 7 செவ் 2 இல்
தகைமை/தொழில்:A/L நகைக்கடை உரிமையாளர்
எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்
தொ.இ: B/13115

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா: 34 ½ சூரி 1 செவ் 9 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:MBBS வைத்தியர்
எதிர்பார்ப்பு: உயர் பதவி கொழும்பு விரும் பத்தக்கது
தொ.இ:G/13130

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: 27 ½ சூரி 3 செவ் 6 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்:கல்வியற் கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ:G/13135

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: சூரி 12 செவ் 2 இல் உயரம்: 5'7"
தகைமை/தொழில்: பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/13140

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 54 ½ சூரி 6 செவ் 4 இல்
உயரம்: 156 cm
தகைமை/தொழில்: BA பட்டதாரி Project Assistant .
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம் அல்லது சிறந்த வியாபாரி
தொ.இ: G/13144

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணிடம்...

அருகில் உள்ள பாதுகாப்பு கமராவில் பதிவாகியுள்ளனர்.

பாடசாலையில் இருந்து தனது பிள்ளையை ஏற்றிச் சென்ற தாய் ஒருவருடைய தங்கச் சங்கிலியே இவ்வாறு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அறுக்க முயற்சி செய்யப்பட்டது.

இருப்பினும் சங்கிலி திருடர்களது கைக்கு கிடைக்காத நிலையில் அவர்கள் தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திருடர்கள் மற்றும் பயணித்த மோட்டார் சைக்கிள் ஆகியன அருகில் உள்ள பாதுகாப்பு கமராவில் பதிவாகியுள்ள நிலையில் இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர் முறைப்பாடு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7,30)

## பாதிக்கப்...

கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி வீதங்கள் அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கே இந்த திட்டம் பொருந்தும்.

நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை தொடர்பான ஆலோசனைக் குழுவில், பாராளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதுள்ள நிதிக் கொள்கைகளின் மூலம், அடுத்த வருட இறுதிக்குள் பணவீக்கம் 4 முதல் 5 சதவீதமாகக் குறைவடையும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க சுட்டிக்காட்டினார். (4-7)

## இந்தியப் படகு...

நேற்று அதிகாலை 2 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்பரப்பில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறை கரையிலிருந்து 4 கடல் மைல் தூரத்தில் நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தது.

இதன்போதே வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி மீன்பிடி சங்கத்தைச் சேர்ந்த எஸ்.விஜயராஜா என்பருக்குச் சொந்தமான படகினை றோலர் படகு மோதி உடைத்து நாசம் செய்துள்ளது.

இதன்போது மீனவர் கடலில் வீழ்ந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பித்துள்ளார். மீனவரது 4 இலட்சம் பெறுமதியான வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (4-7,60)

## பொது வெளியில்...

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததன் பின்னர் முதலாவது பொது நிகழ்வில் நேற்று கலந்து கொண்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அபயராமயவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமய நிகழ்விலேயே கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

கடந்த ஜூலை 9ஆம் திகதி வெடித்த மக்கள் புரட்சியை தொடர்ந்து இலங்கையில் இருந்து வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவு வழியாக சிங்கப்பூரை சென்றடைந்தார்.

இதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் இருந்து தாய்லாந்து சென்றிருந்தார்.

இவ்வாறு சென்றவர் நீண்ட இழுத்தடிப்புகளுக்கு மத்தியில் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதியளவில் மீண்டும் நாட்டை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## புலிகளை விட்டு...

தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகளின் கொடி, சின்னம் மற்றும் அடையாளங்களை பயன்படுத்தக்கூடாது.

அவ்வாறு செயற்பட்டால் தாம் சட்ட நடவடிக்கையெடுப்போம் என்றும், ஆனால் யுத்தத்தில் உயிரிழந்த பொது மக்களிற்கு அஞ்சலி செலுத்துவதற்கு தடையில்லையென்றும் தெரிவித்தனர். (4-7)

## கொழும்பில்...

போராட்டத்தை தடுக்க பெருமளவான பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

போராட்டக்காரர்கள் பேரணியாக பிரதமர் அலுவலகம் முன் சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை குண்டுத் தாக்குதல், நீர்த்தாரை பிரயோகம் என்பன முன்னெடுக்கப்பட்டு போராட்டக்காரர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் கொழும்பில் பல்வேறு பகுதிகளில் சிறு சிறு குழுக்களாய் பிரிந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (4-7)

## இன்று வவுனியா...

பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

வவுனியாவிற்கு இன்று வருகை தரும் அவர், பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ள நிலையில் எதிர்ப்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் முதலாவது நிகழ்வாக அரச உயர் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் கிராம சேவையாளர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் வட மாகாணத்திற்கான ஜனாதிபதி நல்லிணக்க செயலகத்தின் இணைப்பு செயலகமொன்றையும் வைரவபுளியங்குளத்தில் திறந்து வைக்கவுள்ளார்.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் நிகழ்வு இடம்பெறும் பகுதிகளில் தனியார் வகுப்புகள் மற்றும் நிகழ்வுகளை இன்றைய தினம் நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதி நாளை 20 ஆம் திகதி மன்னார் மாவட்டத்திற்கும் பயணம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## தமிழர்களை...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு தலையீடுகள் ஏதும் இன்றி தமிழ் அரசியல் தலைவர்களுடன் பேசி தமிழர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாக அண்மையில் தெரிவித்திருந்தார்.

கடந்த காலத்தில் யுத்தத்தின் மூலம் தமிழர்களை அழிக்க வெளிநாட்டு உதவி தேவைப்பட்டது. தற்போது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வெளிநாட்டு உதவி தேவைப்படுகிறது.

அதபோல் தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க மட்டும் ஏன் வெளிநாட்டு உதவி தேவைப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1398
வெற்றி இலக்கங்கள்
மீனம் 9 0 0 3 1 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.11.18
சீட்டிழுப்பு இலக்கம் -973
H 24 28 64 70
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 3185
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
E 02 26 58 76
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1291
T 13 31 44 46 54

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.11.18
சீட்டிழுப்பு இலக்கம் 252
வெற்றி இலக்கங்கள்
மகரம் 16 31 41 44 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/11/18
சீட்டிழுப்பு இலக்கம் 4943
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
K 1 3 2 3 9 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1918
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.11.18
தினம் வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,302,460/-
K 09 17 41 77
4759 324

வெள்ளிக்கிழமை
சனிதா
சீட்டிழுப்பு திகதி : 2022.11.18
சீட்டிழுப்பு இல : 4079
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 3,989,840/-
வெற்றி இலக்கங்கள்
09 34 41 53
P

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 250
சீட்டிழுப்பு திகதி 2022.11.18
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
33 34 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,346,300/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,358,152.80
வெற்றி இலக்கங்கள்
02 34 46 47
கும்பம்
திகதி 2022-11-18
வெற்றி வாரம் 3630
வர்ணம் நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,288,240/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 19 09 25 31 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 278,408,669.80
சீட்டிழுப்பு வாரம் 1094
ஊதா
2022.11.18
வெள்ளிக்கிழமை
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

வெள்ளிக்கிழமை
அத கோடிபதி
சீட்டிழுப்பு இல : 1744
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2022.11.18
ரூ. 3,875,520/-
வெற்றி இலக்கங்கள்
66 67 68 75 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கார்த்திகை வாசம்' மலர்க் கண்காட்சி நேற்று ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடாத்தும் "கார்த்திகை வாசம்" என்ற மலர்க் கண்காட்சி நேற்று வெள்ளிக் கிழமை ஆரம்பமானது.

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் அமைந்துள்ள மலர்க் கண்காட்சி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது டன். நவம்பர் 27 ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை நடைபெறவு ள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் கலாநிதி நா.சண்முகலிங்கன் , சிறப்பு விருந்தினர்களாகச் சமூகச் செயற் பாட்டாளர் ம.செல்வின் இரேனியஸ், யாழ்ப் பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் ச.ரவி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

(4-7.104)

# யாழ். பல்கலையின் வடமாகாணத்தில் நீர்வளப் பாதுகாப்பு ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

எஹெட் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத் தினால் முன்னெடுக்கப்படும் "வடக்கு மாகாணத்தில் நீர்வளப் பாதுகாப்பு - என்ற செயற்றிட்டத்தின் நடுவழி ஆய் வரங்கும், "வடக்கின் நீருக்கான உரை யாடல் மன்றம் என்ற கருத்துரைப்பு அரங்கும் நாளைமறுதினம் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலை கழக மருத்துவ பீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

21 ஆம் திகதி திங்கட்கிழமை நீர் வள முகாமைத்துவத்துடன் செயற்படு கின்ற அரச நிறுவனங்கள் மற்றும் ஆய் வின் செயற்படு குழுக்கள் மூலமாக சேக ரிக்கப்பட்ட ஆய்வுத்தரவின் அடிப்படையில், பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர் கள் - ஆய்வாளர்களால் முன்னெடுக் கப்பட்ட ஆய்வுகளின் நிலைமைகள் பற்றி ஆய்வரங்கில் முன்வைக்கப்படவுள்ளது டன், பங்கெடுப்பு ஆய்வின் கண்டு பிடிப்புக்கள் மற்றும் நீர் வளத்துடன் தொடர்புபட்ட அதிகாரம் மிக்க தரப்புக ளுடனான கலந்துரையாடல்கள், திறவு ரைகளும் இடம்பெறவுள்ளன.

மறுநாள் 22 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை, நீர் வள முகாமைத்து வத்துடன் செயற்படுகின்ற அரச நிறு வனங்கள், ஆய்வு நடவடிக்கைக்கு தன்னார்வத்துடன் ஒத்துழைப்பு வழ ங்கும் குழுக்கள் - பொதுமக்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு இடையிலான "வடக் கின் நீருக்கான உரையாடல் மன்றம்" என்ற கருத்துரைப்பு அரங்கும் இடம் பெறவுள்ளது.

(4-7)


தேவை
மருந்தாளர் தேவை.
தொடர்பு
076 016 0480
(C-5288)

வேலையாள்
தேவை
யாழ்.நகரில் இயங்கும் புத்தகக் கடைக்கு போட்டோபிரதி எடுக்கத் தெரிந்த / பழகவிரும்பும் பெண் பிள்ளை தேவை.
077 314 4612,
075 314 4611
(13492)

10வருட வெற்றிகரமான சேவையில். JAN/2023
UK அல்லது கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்
நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற...
WORLD EDUCATION CONSULTANCY
0779265447 / 0217200989
(13483)

காணி விற்பனைக்கு
கொக்குவில் ஆடியபாதம் வீதியில் Medical Facultry இலிருந்து 500 m தூரத்தில் சுற்றுமதிலுடன் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- காணி உரிமையாளர்
074 134 5805
(13495)

# மரண அறிவித்தல்



## கந்தையா பத்மநேசன்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முதுநிலை முகாமையாளர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.10.1948 | 16.11.2022 |

கோயில் வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் குளங்கரை ஒழுங்கை கொக்குவில் கிழக்கு மற்றும் சம்பியன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநேசன் கடந்த (16.11.2022) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் - இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும் சிவநேசராணியின் (ஓய்வுநிலை ஆசிரியை - திருக்குடும்ப கன்னியர் மடம்) பாசமிகு கணவரும் கௌசல்யா, முகுந்தன்(பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நந்தீஸ் (T.O), திவாகரி ஆகியோரின் மாமனாரும் அனுசயன், ஆதினி, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மங்களாதேவி, தவநேசன் (இறைவரித் திணைக்களம்), சித்திராதேவி, சிவநேசன் (HNB திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், திருமதி குணரட்ணம், ஞானேஸ்வரன், சுதந்திர ஈஸ்வரன், இராஜேஸ்வரன் மற்றும் திருமதி ஜெயபாலன், திருமதி சிவானந்தராஜா, அம்பலவாணர், பரமேஸ்வரி, பிரேமலதா ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் நடைபெற்று பூதவுடல் மு.ப 11 மணியளவில் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(13494)

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org